

# என்ன சேதி?

- **இரா. அதியமான்**

ஆதித்தமிழர் பேரவை தனது புரட்சிப் பயணத்தின் இருபதாம் வருடத்தில் காலடி பதிக்கவிருக்கும் தருணத்தில் நடத்தும் மதுரை வீரனின் வரலாறு மீட்பு அரசியல் எழுச்சி மாநாடு, பேரவையின் வரலாற்றில் முத்தாய்ப்பான நிகழ்வாகும். ஆதித்தமிழர் பேரவை அருந்ததியர் சமுதாயத்திற்கு கிடைத்த ஒப்பற்ற முகவரி. எக்காலத்திலும் இல்லாத அளவிற்கு நம் மக்களிடையே சமூக உணர்வையும், புரட்சிகர கொள்கைகளையும், வரலாற்று விழிப்புணர்வையும், அரசியல் எழுச்சியையும், விடுதலை வேட்கையையும் உருவாக்கிய முன்னோடி அமைப்பு என்ற பெருமை ஆதித்தமிழர் பேரவையையே சாரும்.

அருந்ததியர் அமைப்புகளின் வரலாற்றில் முதன்முதலாக தூய்மை தொழிலாளர்களுக்கான மறுவாழ்வு மாநாடு மற்றும் செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாடு நடத்தியது துவங்கி, இழிவு ஒழிப்பு போராட்டங்கள், அருந்ததியருக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமைகளை எதிர்த்து சமரசமில்லாத போராட்டங்கள், தீண்டாமையை ஒழிக்கப் போராட்டங்கள், கள் இறக்குவதை

எதிர்த்து போராட்டங்கள், கோயில் நுழைவு போராட்டங்கள் என்று அனைத்திலும் முன்னோடியாய் திகழ்ந்தது ஆதித்தமிழர் பேரவை.

இவையனைத்திற்கும் மேலாக, வரலாற்றின் முக்கியப்பதிவான, அருந்ததியரின் மூன்று சதவிகித உள்ளிடஒதுக்கீட்டினை போராடி பெற்றுத்தந்த பெருமை ஆதித்தமிழர் பேரவைக்கே உரித்தானது. ஆண்டு தோறும் உலக மகளிர் தினத்தன்று மகளிர் மாநாடுகள் நடத்துவது, நம் மக்களிடம் செய்திகளை சென்று சேர்க்க ஆதித்தமிழன் அறிவாயுதம் திங்களிதழ் நடத்துவது, நம் சமுதாயத்தை பெருமைப்படுத்தும் வரலாறு மீட்பு மாநாடுகளை எழுச்சியாய் நடத்துவது என்று பேரவை நம் சமூகத்திற்கு செய்த பணிகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

உண்மையிலேயே பேரவையை பிற தலித் அமைப்புகளிலிருந்து தனித்துவப்படுத்தும் சிறப்பான ஒரு காரணம், ஆதித்தமிழர் பேரவை இதுவரை வெளியிட்டுள்ள நூட்களே. நூற்களின் எண்ணிக்கையிலும் சரி, பொருள் அடக்கத்திலும் சரி, வேறு எந்த ஒரு தலித் அமைப்பும் செய்திராத பணியை, சாதனையாக, நம் சமூகத்திற்கு ஆற்றிய ஊழியமாக பேரவை செய்திருக்கிறது. அப்படி வெளியிடப்பட்ட நூட்களின் மூலம் மக்களுக்கு பெருமளவு சென்று சேர்க்கப்பட்ட வரலாறுகள் தான், மாவீரன் ஒண்டிவீரனின் வரலாறும், மாவீரன் மதுரைவீரனின் வரலாறும். ஆதிக்கசாதிகளால் முற்றிலும் மறைக்கப்பட்ட அல்லது திரித்துக்கூறப்பட்ட வரலாறாக இருந்த இவ்வீரர்களின் வரலாறுகளை சான்றுகளுடன் மீட்டெடுத்து, புத்தகமாக வடித்துக்கொடுத்த பெருமை ஆதித்தமிழர் பேரவையினுடையது. பேரவை முன்னெடுத்த இவ்விரண்டு வரலாறுகளும், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அருந்ததியர் மக்களை வீறுகொண்டு எழச்செய்தது, தன் இனத்தை எண்ணி பெருமை கொள்ளச்செய்தது, அவ்வீரர்களின் பெருமைமிக்க வாரிசுகளாய் நம்மை வலம்வரச் செய்தது.

ஒரு சமூகத்தின் மறைக்கப்பட்ட வரலாற்றை மீட்டெடுப்பதும், அதை சிறப்பிக்க வரலாற்று மீட்பு நிகழ்வுகளை முன்னெடுப்பதும், ஒரு ஒடுக்கப்பட்ட சமூகம் முன்னெடுக்கும் பிற போராட்டங்களை விட முதன்மை முக்கியத்துவம் வாய்ந்தது. இச்சிறப்புமிக்க நிகழ்வுகளையும், வரலாறுகளையும், பிறர் எவரையும் விட அருந்ததியப் பெண்களும் பெற்றோர்களும் மிகக்கூர்மையாக கவனத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில் இவர்கள் இருவரின் கைகளில்தான் அருந்ததியர்களின் விடியலும், விடுதலையும் பெரிதும் அடங்கி இருக்கிறது. இதனை தெளிவுபடுத்த, அருந்ததிய மக்களின் மேல் பேரிடியாய் இறங்கிய அண்ணா பல்கலைக்கழக மாணவி ஜோதியின் தற்கொலைச் சம்பவத்தினை குறிப்பிடலாம்.

அருந்ததியர் மீது எண்ணற்ற வடிவங்களில், எண்ணற்ற வன்கொடுமைகள் நிகழ்த்தப்படும் பொழுதும், அவற்றையெல்லாம் மீறி, விரல் விட்டு என்னும் அளவு மாணவ மாணவிகள் மட்டுமே பட்டம் பெற கல்லூரிகளுக்கு செல்கின்றனர். அப்படிச் செல்லும் இளைஞர்களை, கல்லூரிப் படிப்பின் துவக்கத்திலேயே பெரிதும் பாதிப்பது ராக்கிங் எனப்படும் “கேலிவதை” என்ற கொடுமையாகும். தமிழகம் முழுவதும் அருந்ததிய இளைஞர்கள் கேலிவதை கொடுமைக்கு ஆளாகிறார்கள். கேலிவதையில் சிக்கித்தினரும் பெரும்பாலானோர், இந்த காரணத்திற்காக மட்டுமே கல்லூரிப் படிப்பையே விட்டுவிட்டு சாதாரண கூலி வேலைக்கு சென்றுவிடுகின்றனர். இது போன்ற சம்பவங்கள் நம் சமூக முன்னேற்றத்திற்கே ஒட்டுமொத்தமாய் ஏற்படும் பெரும் தடையாக அமைகிறது.

இந்நிலைமையில்தான், அரிதான சிப்பிக்குள் முத்தாக ஜோதி என்ற முள்ளுக்குறிச்சியை சேர்ந்த பெண், அனைவராலும் உயர்வாக கருதப்படும் சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்திற்கு உயர்கல்வி பெறச் சென்றார். ஆனால் அங்கு நடந்த கொடுமையை என்னவென்று விவரிப்பது? ஆதிக்கசாதி வெறி கொண்ட காட்டுமிராண்டிகள், சாதியின் பெயரால் தன்னை கேலிவதை செய்வதை தாங்கிக்கொள்ள முடியாமல் ஜோதி தற்கொலை

செய்துகொண்டார். இதே போன்று, கிருஷ்ணகிரி மாவட்டம் வெப்பலப்பட்டியைச் சேர்ந்த காயத்ரி என்ற அருந்ததியச் சகோதரி, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் இருக்கும் விவேகானந்தா பொறியியல் கல்லூரியில் பொறியியல் மேல்படிப்பு படிக்கச்சென்றார். அவரும் மர்மமான முறையில் மரணமடைந்தார்.



அண்ணா பல்கலைக்கழக மாணவி ஜோதி



விவேகானந்தா கல்லூரி மாணவி காயத்ரி

நம் சமூகப் பெண்கள் கல்லூரிக்கு சென்று பயில்வதே அரிதிலும் அரிதான ஒன்றாக இருக்க, ஜோதி மற்றும் காயத்ரி போன்ற நம் ரத்த சொந்தங்களின் மரணத்தை நம்மால் எப்படி ஜீரணிக்க முடியும்? இந்த மரணங்கள் நம் அருந்ததிய சமுதாயத்திற்கு எவ்வளவு பெரிய இழப்பு? பிற்காலத்தில் ஜோதியும் காயத்ரியும் சிறந்த பொறியாளர்களாக உயர்ந்திருக்கலாம், நம் இளைய சமுதாயத்திற்கு முன்னுதாரணமாக, கல்வியில் வழிகாட்டிகளாக இருந்திருக்கலாம், பெரும் பெண் தலைவர்களாகக்கூட உருவாகியிருக்கலாம். நம் நெஞ்சங்களில் ரணமாய்ப் பாய்ந்த இந்த மரணங்களின் வலியை, ஆற்றாமையை சரி செய்வது எப்படி?

ஒருபுறம், ஆதித்தமிழர் பேரவை இருவருக்காகவும் நியாயம் கேட்டு பல போராட்டங்களை, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தியது. அதில் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய இரண்டு போராட்டங்கள், ஜோதிக்காக சென்னையில் நடந்த அண்ணா பல்கலைக்கழக முற்றுகைப் போராட்டம், மற்றும் காயத்ரிக்காக நாமக்கல்லில் நடத்திய போராட்டம் (காண்க படங்கள்).



ஜோதிக்காக பேரவை நடத்திய அண்ணா பல்கலைக்கழக முற்றுகை போராட்டம்- 4 அக்டோபர் 2010


முற்றுகை போராட்டத்தில் தோழர்களின் எழுச்சி


ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் ஐயா. அதியமான் அவர்கள் முற்றுகை போராட்டத்தில் நிருபர்களுக்கு அளிக்கும் பேட்டி




காயத்ரிக்கு நியாயம் கேட்டு நாமக்கல்லில் பேரவை நடத்திய தொடர் முழக்கப் போராட்டம் – 24 செப்டம்பர் 2012



நாமக்கல் போராட்டத்தில் நியாயம் கேட்டுத் திரண்ட அருந்ததிய சொந்தங்கள்

மறுபுறம், இது போன்ற தற்கொலைகள் இனி நிகழாமல் இருக்க பெற்றோர்களாக, பெண்களாக, நாம் தனிப்பட்ட முறையில் ஆற்றவேண்டிய கடமை என்ன என்று சமூக உணர்வுடன் சிந்திக்க வேண்டும். பெற்றோர்கள் அனைவரும் நம் முன்னோர்களின் சிறப்புக்களையும், வீரமிக்க வரலாறுகளையும் அறிந்துகொள்வது மிகமுக்கிய காலத்தின் கட்டாயமாகும். அப்போதுதான், தங்களின் குழந்தைகளுக்கு, முக்கியமாக பெண் குழந்தைகளுக்கு சிறு வயது முதலே அவற்றை கற்றுக்கொடுக்க முடியும். வீரம் செறிந்த ஒண்டிவீரன், மதுரைவீரன் போன்றவர்களின் வாரிசுகள் நாம், கலையுடன் இயைந்த வாழ்வினை வாழ்பவர்கள் நாம், வீரம் நிறைந்த விளையாட்டுக்களுக்கு சொந்தக்காரர்கள் நாம், இந்த மண்ணின் சிறந்த உழைப்பாளர்கள் நாம், பகடைகளாய் இருந்து இந்த மண்ணை ஆண்டவர்கள் நாம், முதல் பெண் தற்கொலைப்படை குயிலியின் வாரிசுகள் நாம், தோள் பொருட்களை சிறப்பாகச் செய்யும் சிறந்த கைவினைஞர்கள் நாம், இந்த மண்ணை தெய்வமாய் வழிபடுபவர்கள் நாம் என்று நம் சமூகத்தின் எண்ணற்ற சிறப்புகளை, பெருமைகளை சிறுவயது முதலே குழந்தைகளுக்கு அறிவேற்றம் செய்ய வேண்டும். நமக்குச் சொந்தமான கலைகளை கற்று அவற்றின் பெருமையை நாடுனரும் வண்ணம் வளர்த்தெடுக்க சிறார்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

இப்படி வீரமாய் தன்னம்பிக்கையோடு வளர்க்கப்படும் நம் பிள்ளைகள்தான் பிற்காலத்தில் ஆதிக்கசாதியின் வெறிக்கு அஞ்சாமல், அறிவையும் வீரத்தையும் துணையாகக் கொண்டு, கண்களில் நெருப்பை கக்கி, நெஞ்சினை நிமிர்த்தி, காலை உயர்த்தி **“நான் வீரச் சக்கிளிச்சிடா”** என்று ஓங்கி ஒலித்து, நம் பகைவர்களை பார்த்து **“என்ன சேதி?”** என்று கேட்டு நம் சமூகத்தின் விடுதலைக்கு பாதையிடுவர். எனவேதான் இப்படிப்பட்ட விடுதலையைப் பெற்ற தலைமுறையை உருவாக்கும் பெரும் பொறுப்பு பெண்கள் மற்றும் பெற்றோர்களின் கைகளில் பெருமளவு உள்ளது. இவ்விதமான விடுதலைப் பயணத்தை நோக்கி நகரும் வகையிலேதான், இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க வீரர்களின் வரலாற்றினை

மீட்டெடுப்பதும், வரலாற்று மீட்பு மாநாடுகள் நடத்துவதும் முதன்மைத்துவம் பெறுகின்றன. மிக அதிக அளவில் இதுபோன்ற வரலாறுகளை நூல் வடிவமாகவும், மாநாடுகளின் நிகழ்வாகவும் இந்த மண்ணின் மைந்தர்களான அருந்ததியர்களுக்கு வழங்கிய ஆதித்தமிழர் பேரவைக்கு நெஞ்சார்ந்த வணக்கங்கள்!! நூற்றாண்டுகளைத் தாண்டியும் இந்தப் புரட்சிப் பயணம் தொடர வாழ்த்துக்கள்!!!